செ.வெ.எண்.74 ஜூலை நாள் : 31.07.2018

# பத்திரிக்கைச் செய்தி

## பொதுமக்கள் தங்களுக்கு தேவையான 20 வருவாய்துறை சான்றிதழ்களை தாங்களே இணையதளத்தில் விண்ணப்பிக்கும் வசதி அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.எஸ்.மலர்விழி, இஆப. தகவல்

தருமபுரி மாவட்டத்திலுள்ள 299 பொது இ-சேவை மையங்கள் மூலமாக தற்போது 20 வருவாய்த்துறை சான்றிதழ்கள் பட்டா மாறுதல் மற்றும் சமூக நலத்துறை தொடர்பான சேவைகள் வழங்கப்பட்டு வருகின்றன. இ - சேவைமையங்கள் மூலமாக வழங்கப்படும் 20 வருவாய்த்துறை சான்றிதழ்களின் விவரம் பின்வருமாறு.

இம்மையம் மூலம் பெறப்படும் குடிபெயர்வு சான்றிதழ், வேலையில்லாதவர் என்பதற்கான சான்றிதழ், விதவை சான்றிதழ், விவசாயம் வருமான சான்றிதழ், இயற்கை இடர்பாடுகளினால் இழந்த பள்ளி / கல்லூரி சான்றிதழ்களின் நகல் பெறசான்றிதழ், ஆண் குழந்தை இல்லை என்பதற்கான சான்றிதழ், திருமணம் ஆகாதவர் என்பதற்கான சான்றிதழ், கலப்பு திருமண சான்றிதழ், வாரிசு சான்றிதழ், சாதிசான்றிதழ், கணவனால் கைவிடப்பட்ட பெண் என்பதற்கான சான்றிதழ், வருமான வரி சான்றிதழ், பிறப்பிட சான்றிதழ், வசிப்பிடசான்றிதழ், சொத்து மதிப்பு சான்றிதழ், அடகு வணிகர் உரிமம், கடன் கொடுப்போர் உரிமம், இதரபிற்படுத்தப்பட்டோர் வகுப்பினர் வகுப்பு சான்றிதழ், சிறு குறு விவசாயி சான்றிதழ், முதல் பட்டதாரி சான்றிதழ் போன்றவைகளாகும்.

மேற்கண்ட 20 சேவைகளையும் தற்போது பொதுமக்கள் தாங்களே இணையதளத்தில் விண்ணப்பிக்கும் வசதி அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட சான்றிதழ்களை பெறுவதற்கு பொதுமக்கள் https://www.tnesevai.tn.gov.in/Citizen/ என்ற இணையதள முகவரியை அணுகவும் மேலும் "UMANG" என்னும் கைபேசி செயலி மூலமாகவும் பொதுமக்கள் வருமான சான்றிதழ், சாதிசான்றிதழ், பிறப்பிட சான்றிதழ் ஆகிய மூன்று சான்றிதழ்களையும் தங்கள் கைப்பேசி மூலமாக விண்ணப்பித்து பயன்பெறலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.எஸ்.மலர்விழி, இஆப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு :- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தருமபுரி.**